**"அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்"**



உம்முடைய இளையோர் ஆண் பெண் இருவரும் ஆண்டவரின் குரலுக்கு தாராள உள்ளத்தோடு செவிகொடுத்து மறுமொழி கொடுக்கவும், அருள்பணியாளர், திருத்தொண்டர், துறவற வாழ்வு (துறவற ஆண்கள்/பெண்கள்) அப்போஸ்தலிக்க வாழ்வின் இயக்கங்கள், பொதுநிலையினரின் துறவு வாழ்வு (பொதுநிலையினர் தங்களுடைய வாழ்க்கையை இயேசுவின் மறைத்தூதுக்கு அர்ப்பணித்தவர்கள்) இதுபோன்ற இறைஅழைத்தலுக்கு செவிகொடுக்குமாறு நாம் மன்றாடுவோம். இளையோரும் திருமணமாகாதவர்களும் தாராள உள்ளத்திற்காக மன்றாடவும், தங்களுடைய வாழ்க்கையை முழுவதுமாக ஆண்டவருக்கு அர்ப்பணிக்கவும் மன்றாடுவோம்.

குழந்தைகளுக்காக மன்றாடுவோம். அன்றாட வாழ்வில் இயேசுவின்மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருக்கவும், அன்பில் தொடர்ந்து வளரவும், அவருக்கு முழுவதுமாகப் பணிசெய்யவும் மன்றாடுவோம். குழந்தைகள் இந்தக் கருத்துக்காக இறைவேண்டல் செய்ய அவர்களையும் ஊக்குவிப்போம்.

பெற்றோர்களும், தாத்தா பாட்டிகளும் தங்களின் குழந்தைகளும் குழந்தைகளின் குழந்தைகளையும் இறை அழைத்தலுக்கு ஒப்புக்கொடுத்திடவும், ஆண்டவருக்குப் பணிசெய்யும் தாராள உள்ளத்தையும் தரவேண்டி மன்றாடுவோம். குழந்தைகளும் இதை அடையாளம் கண்டிடவும், அதே போல பங்கில் உள்ள மற்ற குழந்தைகளுக்காகவும் இறைவேண்டல் செய்யவும் மன்றாடுவோம்.

நம்முடைய அதிச க்களில் இறை அழைத்தலுக்காக மன்றாடுவோம். நம்முடைய அதிச க்களில் உள்ள இளையோரை அடையாளம் கண்டு அனுதினமும் குறிப்பாக இன்றும் அவர்களை நம் இறைவேண்டலில் ஒப்புக்கொடுப்போம்.

நம்முடைய பங்குகளில் உள்ள அனைத்துப் பணிக்குழுக்களும் பங்கு மேய்ப்புப்பணி குழு, பங்கு ஒருங்கிணைப்புக்குழு, பங்கு நிதிக்குழு ஆகியவை ஒன்றிணைந்து ஒவ்வொரு ஒன்றுகூடலின்போதும் இக்கருத்துக்காக மன்றாடுவோம். பணிக்குழுக்களில் ஒவ்வொருவரும் அனுதினமும் இதற்காக மன்றாடுவோம்.

வாரநாட்களில் திருப்பலிக்குச் செல்லும் ஒவ்வொரு பங்கு மக்களும் இந்த இறை அழைத்தலுக்காக மன்றாடுமாறு கேட்டுக்கொள்வோம்.

திருமணி ஆராதனையின்போது இக்கருத்துக்காக மன்றாடுவோம்.

நம்முடைய செபமாலையின் போது ஒரு பத்துமணிகளை இறை அழைத்தலுக்காக ஒப்புக்கொடுப்போம்.

ஒவ்வொரு பங்கும் ஞாயிறுத் திருப்பலியின் போது நம்பிக்கையாளர்களின் மன்றாட்டில் இதற்காக ஒரு கருத்தை இணைத்து மன்றாடுவோம். ஒவ்வொரு மாதத்திலும் பங்குகளில் இறைஅழைத்தலுக்கான ஒரு நிகழ்வுக்கு நேரம் ஒதுக்குவோம்.

பங்கு அருள்பணியாளர், இளைஞர்கள் மற்றும் திருமணமாகாத இளையோர்களை அடிக்கடி சந்தித்து இதைப் பற்றி கலந்துரையாடுதல்

நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆண்டவர் தம் பணிக்கென தேர்ந்துகொண்ட நம் இளையோருக்காக தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம். நம் இளையோர் மீது உயிர்த்த ஆண்டவரின் அருள் நிறைவாய்ப் பொழிய வேண்டுமென்று உயிர்த்த ஆண்டவரை நோக்கி, மன்றாடுவோம்! மன்றாடுவோம்! மன்றாடுவோம்!

மன்றாடுங்கள். உங்கள் எண்ணங்களை மின்னஞ்சல் மூலம் தெரிவியுங்கள்.

*Published by:*
**Peninsular Malaysia Pastoral Team**

*Edited by:*
**Fr. Eugene**
*Director*
KL Archdiocesan Pastoral Institute (API)

*email:*
apidirectorkl@gmail.com

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

BUL 18/2023

29 & 30 ஏப்ரல் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

### மாதாந்திர கருப்பொருள்: வாழ்வின் புதுமைத்தன்மை

### நிகழ்வின் நோக்கம்: தவக்காலம் & ஈஸ்டர் காலம்

உலக இறை அழைத்தலுக்கான இறைவேண்டல் நாள் - ஏப்ரல் 30,2023 அன்று கொண்டாடப்படுகிறது. மேலும் இது இறை அழைத்தல் ஞாயிறு அல்லது நல்லாயன் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாளின் மிக முக்கியமான நோக்கம் ஆண்டவரின் கட்டளையை வெளிப்படையாக நிறைவேற்றுவது. **"அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்"**

